# மன்னா

## CSI தமிழ் திருச்சபை அலைன்

**அழிந்துபோகிற**
**போஜனத்திற்காக அல்ல**
**நித்தியஜீவன்வரைக்கும்**
**நிலைநிற்கிற போஜனத்திற்காகவே**
**கிரியை நடப்பியுங்கள் அதை**
**மனுஷகுமாரன் உங்களுக்குக்**
**கொடுப்பார் அவரைப் பிதாவாகிய**
**தேவன் முத்திரித்திருக்கிறார்**
**என்றார்**

**யோவான் 6:27**

Do not work for food that spoils, but for food that endures
to eternal life,which the Son of Man will give you.
For on him God the Father has placed

John 6:27


பொழிவு12 மார்ச் 2019 ஆகாரம் 03

# Prize distribution winners





















# Annual Church picnic



More photos will apapear in our next Manna..........

| 2019 மார்ச் மாத ஊழியங்கள் Service / Ministry in the Month of March 2019 | | |
|---|---|---|
| 01st Mar 11:00AM-1:00PM | உபவாச ஜெபக்கூடுகை | ஆயர் இல்லம் |
| 01st Mar 7:00PM - 9:00PM | பரிசுத்த திருவிருந்து ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 6th Mar 7:00PM - 9:00PM | சாம்பல் புதன் | மஜ்லிஸ் ஹால் |
| 8th Mar 7:00PM - 9:00PM | பெண்கள் ஐக்கியசங்க சிறப்பு ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 15th Mar 7:00PM - 9:00PM | பரிசுத்த திருவிருந்து ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 16th Mar 7:30PM-8:30PM | பெண்கள் ஐக்கிய சங்கம் மாதாந்திர ஜெபகூடுகை | ஆயர் இல்லம் |
| 22nd Mar 7:00PM - 9:00PM | மாலை ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 29th Mar 7:00PM - 9:00PM | துதி ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 30th Mar – 5th Apr 4:00PM -8:00PM | விடுமுறை வேதாகம வகுப்புகள் | மஜ்லிஸ் ஹால் |
| 31st Mar 11:30PM to 12:30AM | மாத இறுதி மற்றும் புதிய மாத துவக்க ஆராதனை | ஆயர் இல்லம் |

## உள்ளே


ஆயர் மடல்
திருமறை தியானப்பகுதி
ஆயரம்மா மடல்
செயலரிடமிருந்து
வேதாகம களஞ்சியம்
கட்டுரைகள்
சிறுவர் பகுதி
வேத வினா விடை போட்டி
பிறந்த நாள் திருமண நாள் ஆசரிப்போர்
தெரிந்து கொள்வோம்
தினசரி வேதவாசிப்பு


## CSI தமிழ் திருச்சபை- அல்-அய்ன் ஊழியங்கள் (பொது)

### மெயின் ஒர்ஷிப் ஹால் - ஓயாசிஸ் ஆஸ்பித்திரி வளாகம், அல்-அய்ன்
### Main Worship Hall – Oasis Hospital Campus, Al-Ain, UAE

| | | |
|---|---|---|
| 1st & 3rd Fridays / வெள்ளி | 7:00 PM | Communion Service / திருவிருந்து ஆராதனை |
| 1st & 3rd Fridays / வெள்ளி | 6:30 PM | Men's Prayer / ஆண்கள் ஐக்கிய சங்கம் |
| 2nd & 4th Fridays / வெள்ளி | 7:00 PM | Evening Regular Service / மாலை ஆராதனை |
| 2nd & 4th Fridays / வெள்ளி | 6:30 PM | Bible Study / வேதாகம வகுப்பு |
| Every Friday / எல்லா வெள்ளி | 6:15 PM | Children's Bible School / சிறுவர் வேதாகம வகுப்புகள் |

### ஆயர் இல்லத்தில் நடைபெறும் ஊழியங்கள்
### Ministries at Parsonage

| | | |
|---|---|---|
| 1st Friday / வெள்ளி | 11:00AM | Fasting Prayer / உபவாச ஜெபம் |
| 2nd & 4th Sat / சனிக்கிழமை | 7:00 PM | Gospel Ministry / சுவிசேஷ ஊழியம் |
| 3rd Sat / சனிக்கிழமை | 7:30 PM | Women's Prayer / பெண்கள் ஐக்கிய சங்கம் |
| All Wed /எல்லா புதன்கிழமை | 7:30 PM | Bible Study / வேதாகம வகுப்பு |
| Last Day of Every Month மாதத்தின் கடைசி நாள் | 11:30PM | Month End & Beginning Prayer மாத இறுதி மற்றும் புதிய மாத துவக்க ஆராதனை |

# ஆயர் மடல்...

அன்புக்குரியவர்களே!

***புதிய மார்ச் மாதத்தின் வாழ்த்துக்கள்!***

நமதாவிக்குரிய வாழ்க்கையில் பல உருமாற்றங்களை கொண்டு வருகிற இந்த லெந்து காலத்தை மனமகிழ்ச்சியுடன் வரவேற்று, இந்த மாதத்தில் தேவனை நெருங்கி ஜீவிக்க , தவறான வாழ்க்கையை முறையை வெறுத்தொதிக்கிவிட்டு, கிறிஸ்துவுக்குள் ஒரு தவ வாழ்க்கையை இந்த புதிய மாதத்தில் மேற்கொண்டு ஆவிக்குரிய வாழ்வில் உருமாற்றம் பெற முயற்சி செய்வீர்களாக!

வருகிற சாம்பல் புதன் (Ash Wednesday) முதல் இந்த ஆவிக்குரிய 40 days ஆசரிப்பில் நம்முடைய விசுவாசத்தை வெளிப்படுத்தும் வண்ணம், ஆவிக்குரிய எல்லா ஒழுங்குகளையும் தவறாமல், உறுதியோடு கடைபிடிக்க வேண்டிக்கொள்கிறேன். பொதுவாக இந்த லந்து காலத்தை சுயபரிசோதனையின் காலமாக, மனந்திரும்பி பாவங்களை உணர்ந்து அறிக்கையிடும் காலமாக, தேவனோடும், பிறரோடும் ஒப்புரவாகுதலின் காலமாக, பலவிதமான நற்கிரியைகளில் தீவிரமாக ஈடுபடும் காலமாகவும் இருக்கிறபடியால்; இந்த காலத்தை மனமகிழ்ச்சியுடன் வரவேற்று , ஒவ்வொரு நாளையும் தேவசமூகத்தில் காத்திருந்து செலவிட தீர்மானம் செய்வோம்.

பிற திருச்சபை மக்களோடு இணைந்து ஆராதனையிலும், மற்ற திருச்சபை ஏறெடுக்கும் எல்லா ஊழியங்களிலும் உற்சாகத்தோடு பங்கு பெற ஒவ்வொரு திருச்சபை அங்கத்தினர்களையும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்தி, அன்போடு அழைக்கிறேன்.

இப்படிக்கு,
***உங்கள் ஆயர்,***
***Rev. M. Christopher Rajendran.***

***Happy Lenten Season…!***

***A season of Spiritual Preparation...***

## திருமறை தியானப்பகுதி...

*அன்புக்குரியவர்களே,*

*"அழிந்து போகிற போஜனத்திற்காக அல்ல, நித்திய ஜீவன் வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காக கிரியை நடப்பியுங்கள், அதை மனுஷகுமாரன் உங்களுக்குக் கொடுப்பார் " யோவான் 6:27 .*

***"Do not labour for the food which parishes; but for the food which endures to eternal life, which the Son of Man will give to you".***

*கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் போதனைகளை பல மணிநேரத்திற்கு மேலாக உற்சாகத்தோடு கேட்ட மக்களுக்கு நன்றாகப் பசி எடுத்தது, இதை மனுஷகுமாரனாகிய கர்த்தர் உணர்ந்து கொண்டு, ஆன்மீக பசியை மாத்திரமல்ல தெய்வகுமாரன் என்பதை வெளிப்படுத்த சரீர பசியை போக்க 5 அப்பங்களை , 2 மீன்களை தமது வல்லமையால் பெருகச்செய்து 5000 ஆண்களுக்கும், அவர்களோடிருந்த பெண்கள், சிறுவ சிறுமிகளுக்கும் பங்கு போட்டுக் கொடுத்தார். அவர்கள் அனைவரும் திருப்திகரமாக உண்டு, தேவனால் கொடுக்கப்பட்ட தெய்வீக உணவை ருசி பார்த்துவிட்டு, தொடர்ந்து அப்படிப்பட்ட தெய்வீக உணவு கிடைக்க இயேசுவைக் குடும்பம், குடும்பமாக, கூட்டம்-கூட்டமாக தேட ஆரம்பித்தார்கள்.*

*இயேசு எங்கே சென்றாலும் விடாமல் பின்தொடர்ந்து கொண்டே இருக்க, இயேசு கிறிஸ்து அவர்களைப் பார்த்துச் சொன்னார் இந்த வார்த்தைகளை, அழிந்து போகிற போஜனத்திற்காக அல்ல...நித்திய ஜீவன் வரைக்கும் நிலை நிற்கிற போஜனத்திற்காக கிரியை நடப்பியுங்கள்!, அதை மனுஷகுமாரனாகிய நான் உங்களுக்கு கொடுப்பேன், ஜீவ அப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான்..! இதற்கு அர்த்தம் என்னவென்றால்... கர்த்தராகிய என்னைத் தேடும்பொழுது, உங்கள் தேடலின் உள்நோக்கம் என்னவாக இருக்க வேண்டும் என்றால்..? பரலோகத்தை, பரோகத்திலுள்ள ஆசீர்வாதங்களை, நித்தியத்திலுள்ள நிலையான வாழ்க்கையை, எல்லாவற்றிற்கும் மேலாக திரியேக தேவனுடைய சமூகத்திலுள்ள நித்திய ஆனந்தமான வாழ்க்கையை..! நித்திய இரட்சிப்பையும் மையமாக, முக்கியமாக வைத்தே தன்னைத் தேடவேண்டும்.*

*மேலும் தேவனுக்கேற்ற கிரியை என்றால் என்ன ? என்று தன்னை ஆவலுடன் தேடின மக்களைப்பார்த்து இயேசு கிறிஸ்து சொன்னது, தன்னை விசுவாசிப்பதே ! தேவனுக்கேற்ற கிரியை ! என்கிறார். இங்கே*

*விசுவாசத்தோடு கிரியையை சமமாக்கிப் பேசுகிறார் ! (Here faith and works are synonymous).The growth of the faith is measured by works. Faith will reach its perfection through works. So both are inseparable. கிரியை இல்லாத விசுவாசத்தை செத்துப்போன விசுவாசத்தோடு ஒப்பிட்டுப்பேசுகிறோம்! (யாக்கோபு'2ம் அதிகாரத்தில் பார்க்கிறோம்). Faith without works is dead. இதற்கு என்ன அர்த்தம்?*

*விசுவாசத்தை நிருபிக்க கிரியை நடப்பியுங்கள், விசுவாசம் சோதிக்கப்படும் பொழுது கிரியை மூலமாக விசுவாசத்தை நிருபிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது ஒரு விசுவாசிக்கு..! ஆதலால் விசுவாசத்தோடு கிரியையையும் இணைத்தே நாம் பார்க்க வேண்டும், அவ்வாறே புரிந்து கொண்டு தேவனைத் தேடுவோம். இந்த லெந்து காலத்திலாவது மேற்கண்ட சத்தியத்தின் அடிப்படையில் தேவனைத் தேடுவோம். உலகப்பிரகாரமான நன்மைகளை, சரீரப்- பிரகாரமான நன்மைகளை, மற்ற தேவைகளை மையப்படுத்தி கர்த்தரை தேடியதற்கு இந்த 40 நாட்களுக்கு மட்டும் ஓய்வு கொடுத்துப் பழகுவோமாகில், கர்த்தரை இந்த புதிய மாதத்தில் கண்டுணர்ந்து மெய்யான சமாதானத்தையும் மெய்யான சந்தோஷத்தையும், நித்திய ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொண்டு தேவனோடு நெருங்கிய உறவை ஏற்படுத்தி நம்மை ஆவிக்குரிய வாழ்வில் உயிர்ப்பிக்கவும், உருமாற்ற மடையச் செய்வோம்.*

*அன்புடன்... **உங்கள் ஆயர்,***
***Rev. M .Christopher Rajendran***

## ஆயரம்மா மடல்

*அன்புக்குரிய தாய்மார்களே..!*

*நாம் கர்த்தருடைய கிருபையினால் மற்றும்மொரு லெந்து காலத்திலே இந்த புதிய மாதத்தில் அடியெடுத்து வைத்துள்ளோம். இந்த ஆன்மீக வசந்தம் வீசும் காலத்திலே, தாய்மார்களாகிய நாம் கிறிஸ்துவின் நறுமணம் பரப்ப அழைக்கப்படுகிறோம்.*

*நம்மை நாமே சோதித்து பார்க்கவும், தாழ்மையோடு உபவாசித்து ஜெபிக்கவும், நற்கிரியைகளில் தீவிரமாக ஈடுபடும் பொழுது, இந்த புதிய மாதத்தில் கிறிஸ்துவின் நறுமணம் பரப்பப்படுகிறது மேலும் நாம் நற்கனிகளையும் பிறப்பிக்க அழைக்கப்படுகிறோம். ஆதலால் இந்த லெந்து காலத்தை சிறப்பாக ஆசரிப்போம்! உறுமாற்றமடைவோம்!*

*இப்படிக்கு...உங்கள் ஆயரம்மா*
***Angel .C***

# செயலரிடமிருந்து...

*பிரியமானவர்களே...*

*இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் உங்கள் அனைவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள். சென்ற பெப்ரவரி மாதத்தில் தேவன் நமக்கு செய்தவைகளை நன்றியுடன் நினைவு கூறுவோம். கண்ணின் மணிபோல காத்து வந்து; புதிய மாதத்தை காண கிருபை செய்த தேவனை அதிகமாய் ஸ்தோத்தரிப்போம்...நாம் நினைத்ததற்கும் மேலானவைகளை அவர் செய்தார்...*

*கடந்த மாதத்தில் திருச்சபையாய் இன்ப சுற்றுலா, மற்றும் SKD திருச்சபையின் அறுப்பின் பண்டிகைக்கு சென்றுவர தேவன் நமக்கு கிருபை கூர்ந்தார். ஒன்றிணைந்து செயல்பட்ட திருச்சபை மக்கள் அனைவருக்கும் என் அன்பின் வாழ்த்துகளும் நன்றியும் உரித்தாக்குகிறேன்.*

*வரும் நாட்களில் செயல்படுத்த திட்டமிடப்பட்டிருக்கும் ஒவ்வொரு ஆராதனைகளுக்காக, திருச்சபையின் ஊழியங்களுக்காக அனைவரும் ஒருமனப்பட்டு ஜெபிப்போம். உங்கள் ஊக்கமான ஜெபமும், ஆதரவும், ஈடுபாடும் நம் திருச்சபை ஊழியத்தில் அதிகரிக்க, அதிகமாய் ஜெபித்திட வேண்டுகிறேன். அதிக உற்சாகத்தோடு அனைத்து ஆலய ஆராதனைகளில் பங்கு பெற்று தேவாசீர்வாதம் பெற்று செல்ல அன்புடன் அழைக்கிறேன்.*

*இப்படிக்கு ...அன்புடன் கிறிஸ்துவின் பணியில்*
***S. சுரேஷ் ராஜன்***

| நமது மிஷினரி ஊழியத்தேவை | | |
|---|---|---|
| **மிஷனரி பெயர்** | திரு. சூரிபால் சதா | திரு. கிறிஸ்டோபர் |
| **பணித்தளம்** | நீலமங்கலம் , கள்ளக்குறிச்சி-மாத்தூர் | மேல்முத்தானூர்-குருகிலாமூர் |
| **ஒரு மாத ஸ்பான்ஸர் தொகை** | ***AED 450/-*** | ***AED 450/-*** |
| *அன்புக்குரியவர்களே... நமது திருச்சபையின் முலமாக மலைவாழ் மக்கள் மத்தியில் ஊழியம் செய்யும்படி அனுப்பப்பட்ட மிஷனரிகளுக்காக, அவர்கள் குடும்பங்களுக்காக அனுதினமும் ஜெபியுங்கள். கர்த்தர் உங்களோடு பேசுவாரனால்...நீங்களும் இந்த மிஷனரி ஊழியத்தை தாங்க முன்வாருங்கள். ஒரு குடும்பமாகவோ அல்லது பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்து மிஷனரிகளை தாங்க முன்வர உங்களை அன்போடு அழைக்கிறேன்.* | | |

# தெரியுமா உங்களுக்கு.... யூதர்களின் நாட்கள்

| நாள் | யூதருகுரிய நாள் | நவீன நாள் |
|---|---|---|
| முதலாம் நாள் | யோம் ரிஷோன் *Yom Rishon* | ஞாயிற்றுக்கிழமை |
| இரண்டாம் நாள் | யோம் ஷணீ *Yom Sheni* | திங்கட்கிழமை |
| மூன்றாம் நாள் | யோம் ஷ்லிஷி *Yom Shlishi* | செவ்வாய்க்கிழமை |
| நான்காம் நாள் | யோம் ரேவி *Yom Rev'i* | புதன்கிழமை |
| ஐந்தாம் நாள் | யோம் சமிஷி *Yom Chamishi* | வியாழக்கிழமை |
| ஆறாம் நாள் | யோம் ஷிஷி *Yom Shishi* | வெள்ளிக் கிழமை |
| ஏழாம் நாள் | யோம் ஷாபத் *Yom Shabbat* | சனிக்கிழமை |

வேதாகம களஞ்சியம்

வாரத்தின் முதலாம் நாள் ஓய்வு நாளான ஏழாம் நாள் யோம் ஷபாத் சனிக்கிழமை மாலை ஆறு மணி முதல் முதலாம் நாளின் மாலை ஆறு மணிக்கு முடிவு பெறுகிறது.

## *Missionary Biography*

### ***"சாராள்தக்கர்" மிஷனரியின் பணிகள்***



இந்திய மிஷனரி ஊழிய வளரச்சியில் ஆண் மிஷனரிகளுக்கு இணையாக பெண் மிஷனரிகளின் பங்களிப்பும் முக்கியமானது.அதில் இங்கிலாந்து தேச மிசனரி சாராள் தக்கர் அம்மையாரின் பணி முக்கியமானது. ஏனெனில் இவர் இந்தியா தேசத்திற்கு நேரில் வந்ததே இல்லை.ஆனாலும் இவர் செய்ததைப் போல இங்கிருக்கும் எவரும் செயல்படவில்லை என்றே சொல்லலாம்.

சி.எம்.எஸ்'ஸின் செயலராக சென்னையில் பணியாற்றிய ஐயர் கனம் ஜான்தக்கர் அவர்களின் சகோதரி தான் சாராள் தக்கர். ஜான் தக்கர் கிறிஸ்தவ மிஷனரியாக பாளையங்கோட்டை பகுதியில் இருந்த போது

இங்குள்ள பெண்களின் நிலைமைகளை பார்த்து விட்டு பெண்கள் பள்ளிக்கூடமே போவதில்லையாம். வேற்று ஆண்களை பார்த்தால்கூட வீட்டின் உள்ளே சென்று கதவை சாத்திக்கொள்கிறார்கள் என்று எழுதின கடிதம், இங்கிலாந்து நாட்டில் உள்ள தனது சகோதரி, மாற்று திறனாளியான பதினாலு வயது சாராள் தக்கர் வாழ்வில் பெரும்பாதிப்பை கொண்டு வந்தது.

பெண்களை கல்வி கூடங்களுக்கு அனுப்பாமல் "அடுப்பூதும் பெண்டிருக்கு படிப்பெதற்கு" என நினைத்த சமுதாயத்தில் பெண்கள் கல்விக்காக உதவிகள் தேவை என்பதை கனம் ஜான் தக்கர் ஐயர் அவர்கள் தனதுசகோதரிக்கு எழுதி அடிக்கடி தெரிவித்ததால் இருகால்களும் ஊனமுற்ற நிலையில் இருந்தாலும் பெண்கல்விக்காக தன்னை அர்பணித்தாள் சாராள் தக்கர். கடிதத்தை படித்தவுடன் சாராள் தக்கர் தன்னுடைய 100 பவுன் நகைகளுடன், தன்னுடன் படிக்கும் சக மாணவிகளிடம் சுமார் 200 பவுன் வசூலித்து தனது அண்ணன் ஜான் தக்கருக்கு அனுப்பி வைத்து உடனடியாக பெண்கள் கல்வி பயில ஒரு பள்ளியையும் ஆசிரிய பணி புரிய ஆசிரிய பயிற்சி கல்வி நிறுவனம் ஒன்றை நிறுவவும் கேட்டு கொண்டாள்.

சாராள் தக்கர் அனுப்பின முதல் உதவித்தொகையில் 1843 ல் கடாட்சபுரத்தில் ஆசிரிய பயிற்சிப்பள்ளி பெண்களுக்கென தொடங்கபபட்டது. அதே வருடம் சாத்தான்குளத்தில் பெண்கள் பள்ளியும், விடுதியும் கட்டப்பட்டது. சாராள்தக்கர் ஆசிரியை பயிற்சியில் படித்து முடித்த ஆசிரியைகளைக் கொண்டு மிக குறுகிய காலத்தில் பாளையங்கோட்டை, தென்காசி, நல்லூர், திருநெல்வேலி சந்திப்பு போன்ற இடங்களில் 20க்கும் மேற்பட்ட கிளைப்பள்ளிகள் தொடங்கப்பட்டன. அதுமட்டுமல்ல 1895ல் சாராள் தக்கர் பெண்கள் கல்லூரி தென் இந்தியாவிலேயே முதன் முதலாக தொடங்கப்பட்டது. இன்று அநேக பள்ளிகள் ஆலமரம் போல் விழுது விட்டு வளர்ந்து நிற்கிறது. ஒவ்வொரு முறையும் தனது கால்கள் நடக்க முடியாவிட்டாலும், படுத்த படுக்கையில் இருந்து கொண்டே தையல் வேலைகளைச் செய்தும், தமது நண்பர்களுக்கு கடிதம் எழுதி உதவி பெற்றும் ஒரு நல்ல பணத்தொகையை சேர்த்து அனுப்பினார்.

1857ம் வருஷம் சாராள் தக்கர் என்னும் தன்னலமற்ற கிறிஸ்துவின் கோதுமை மணி பூமியில் விதைக்கப்பட்டு தேவனுடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார். அதனால் தேவப்பணி தடைபடவில்லை. ஏனெனில் சாராள் தக்கர் அம்மையாரின் பணிகளை செய்து முடிக்க தேவன் அம்மையாரின் தோழிகளை எழுப்பினார். மரியா சைல்டர்ஸ், சோபியா டீக்கள், ஜோவன்னாகர் போன்றவர்கள் முயற்சியினால் பாளையங்கோட்டை சாராள் தக்கர் பெண்கள் பள்ளி மற்றும் ஆசிரியை பயிற்சிப்பள்ளி 1858ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. இப்படி பல வருடங்களுக்கு முன்னால் உருவான கல்வி நிறுவனம் தான் பாளையங்கோட்டையில் பிரசித்தி பெற்ற சாராள் தக்கர் பள்ளி மற்றும் சாராள் தக்கர் மகளிர் கல்லூரி. லட்சக்கணக்கான பெண்களுக்கு

*அறிவொளி ஏற்றிய சாராள் டக்கர் கடைசி வரை திருமணம் செய்து கொள்ளவே இல்லை. இந்தியா தேசத்திற்கு நேரில் வந்ததும் இல்லை.*

*தேவ பிள்ளையே.... உடல் ஊனமுற்ற இந்த சகோதரியே நிச்சயமான ஓட்டத்தை ஓடியிருக்கும்போது நீங்களும் நானும் எப்படி சும்மா இருக்க முடியும்? இந்த கல்வி நிறுவனத்தின் பொன்மொழி **(MOTTO)** போல "எனவே நீங்கள் அழிவில்லாத கிரீடம் பெறக்கூடிய விதத்தில் இயங்கவும்" கர்த்தர் கிருபை செய்வாராக...!*

## கட்டுரைகள் / ARTICLES

***லெந்துகால சிந்தனை:***

# “மன்னித்து மறப்பாயாக”

சாம்பற் புதனன்று நாம் லெந்து காலத்துக்குள் நுழையப் போகிறோம். மீண்டும் ஒரு விசை நம்மை நாமே தற்பரிசோதனை செய்து கொள்ளவும், நம்மை ஆராய்ந்து ஆண்டவரோடு ஒப்புரவாக்கவும், நம்மை வெறுத்து ஒறுத்து உபவாசத்தோடு கூட ஆண்டவருடைய பாதத்தில் அமர்ந்து அவர் நமக்காக பட்ட பாடுகளை தியானம் செய்யவும் அவரோடு கொண்டிருக்கும் ஐக்கியத்திலே பலப்படவும் ஆண்டவர் நம் எல்லோருக்கும் ஒரு அரிய சந்தர்ப்பம் கொடுக்கிறார்.

பொதுவாக இந்த நாட்கள் நமக்கும் தேவனுக்கும் இடையிலான உறவை மேம்படுத்துவதற்கும், நம் உடன் விசுவாசிளுடன் அன்பிலே மேம்படுவதற்கும் முக்கியத்துவம் தரும் “மன்னிப்பு”க்கு, இயேசு கிறிஸ்துவின் சிலவைப் பாடு முன் மாதிரி. மன்னிக்கும் போது கிறிஸ்து மன்னிக்கிறது போல மன்னித்து மறக்க வேண்டும். கிறிஸ்து நம்முடைய பாவங்களை மன்னிக்கிறார் மறக்கிறார். இதனாலே நாம் எல்லோரும் சாபத்திற்கு தப்புகிறோம். நியாயத் தீர்ப்பிலிருந்து பாதுகாக்கப் படுகிறோம். “நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.” (1 யோவான் 1:9) என்று வேதம் சொல்லுகிறது “மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார்” (சங் 103:12). சிந்தித்துப் பாப்போமானால், வடக்கிற்கும் தெற்கிற்கும் என்று அவர் சொல்லாமல், மேற்குக்கும் கிழக்குக்கும் என்று சொல்லுகிறார். வடக்கே போனால் வட துருவம் தெற்கே போனால் தென் துருவம் என்று எல்லைகள் இருக்கிறது, இவற்றை நாம் அளந்து விடலாம். ஆனால் கிழக்கு மேற்கு எல்லைகளை நம்மால் கணக்கிட முடியாது காரணம் உருண்டையான உலகின் எல்லையை கணக்கிட முடியாதது போலவே கா்த்தர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கியதையும் நம்மால் கணக்கிட முடியாது.

ஒரு முறை ஒரு பூகோள ஆசிரியர் மிகவும் அதிகமான கடலின் ஆழங்களைக் குறித்துப் பேசிக்கொண்டு வரும் போது, பசிபிக் மகா சமுத்திரம் ஐந்து மைல் அழவிற்கும் மேலான ஆழம் என்று சொன்ன போது ஒரு கிறிஸ்தவ மாணவன் ‘‘அல்லேலூயா’’ என்று சத்தமாய் ஆர்ப்பரித்தானாம். ஆசிரியர் திரும்பிப் பார்த்தார். அந்த மாணவன், ‘‘ஐயா, இயேசு கிறிஸ்து என்னுடைய பாவங்களை கடலின் ஆழத்தில் போட்டு விட்டார் என்று வேதத்தில் நான் வாசித்தேன். பசிபிக் மகா சமுத்திரம் ஐந்து மைல் ஆழமுடையது என்று நீங்கள் சொன்னீர்கள். அவ்வளவு மகா ஆழத்தில் ஆண்டவர் என் பாவங்களை எறிந்து விட்டு அதை எண்ணாமல் இருக்கிற பாக்கியத்தை நினைத்து நான் ஆனந்த பரவசமடைகிறேன்’’ என்று அவர் பார்வைக்கு பதில் உரைத்தானாம். ஆம், ஆண்டவர் நம்முடைய பாவங்களை மன்னிக்கிறார், மறக்கிறார், எட்டமுடியாத அழவுக்கு தூரமாக்குகிறார்..

‘‘கிறிஸ்து மன்னித்தது போல’’ என்கிற வார்த்தைகளை சற்று சிந்தித்துப் பார்ப்போம் ஆம், சிலுவையில் அவர் மொழிந்த வார்த்தைகளில் முதல் வார்த்தை மன்னிப்பின் வார்த்தைதான். சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த வேளையில் கூட அருகிலிருந்த கள்ளனுக்கு மனப்பூர்வமாக மன்னிப்பு அளித்தார். புனித வெள்ளி அன்று மும்மணி தியான ஆராதனையில் ஏழு வார்த்தைகளில் முதல் வார்த்தையாக மன்னிப்பு என்ற வார்த்தையை சிந்தனையாய் கேட்கிறோம். கேட்பதோடு அல்லாமல் அதை நம் அன்றாட வாழ்க்கையில் கை கொள்ள நாம் முயற்சிப்போம். நம்முடைய சொந்த முயற்சியால் அல்ல. தேவ பெலத்தோடு கூட அவர் சமூகத்தில் காத்திருப்போம் அவர் நமக்கு பெலன் தருவார்.

இந்த லெந்து நாட்களில் நம் ஒவ்வொருவரும் இப்பேர்பட்ட அனுபவங்களைப் பெற எடுக்கும் ஒவ்வொரு ஆயத்தங்களையும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துதாமே ஆசீர்வதித்து தருவாராக.

***Article by: M.Nesamony.***





***Dear Children’s…***
***If you are interested Playing Keyboard for a Song During our Church Service, (during offertory), Please inform us in advance (min 2 weeks) and attend the Choir Practice at Parsonage. Necessary Song Notes, Support & guidance shall be provided as required.***




# நீங்கள் போங்கள் (Go ye)

இங்கு போங்கள் என்பதற்க்கு பயன்படுத்தப்படுகிற கிரேக்க பதம் என்னவெனில் பொரேயுதெண்டஸ் (poreuthentes). அதாவது செயல்பாட்டு வினையில் பன்மையில் சொல்லப்பட்ட கட்டளை. செய்ப்பாட்டு வினையில் சொல்லப்பட்டிருப்பதால் போதல் அல்லது புறப்படுதல் என்பது தானாக நிகழ்கின்ற ஒன்றல்ல. மாறாக ஒருவர் நம்மை உந்தி தள்ளுகிற நிகழ்வு என்பதை நாம் புரிந்து கொள்ளுதல் வேண்டும். உண்மையில் நம்மை உந்தி தள்ளுகிறவர் நம்முடைய ஆண்டவராகிய இயேசு என்பதை நாம் உணருதல் வேண்டும். போங்கள் என்றால் நம் ஆண்டவராகிய இயேசு எங்கேயிருந்து எங்கே அனுப்புகிறார் என்பதை நாம் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.


குறிப்பாக மத்தேயு 10: 5,6,7 ஆகிய திருவசனத்தில் "இயேசு தனது சீடர்களாக இருந்த பன்னீருவரையும் அனுப்பியபோது. அவர்களுக்கு அறிவுரையாக கூறியது பிற இனத்தாரின் எப்பகுதிக்கும் செல்ல வேண்டாம். சமாரியரின் நகர் எதிலும் நுழைய வேண்டாம். மாறாக வழி தவறி போன ஆடுகளான இஸ்ரவேல் மக்களிடமே செல்லுங்கள். அப்படி செல்லும்போது விண்ணரசு நெருங்கிவிட்டது என பறை சாற்றுங்கள்" என்கிறார். புற இனத்தாராகிய கலிலேயாவுக்கும் செல்ல வேண்டாம், கலப்பினத்தவர்கன் வாழும் சமாரியாவுக்கும் செல்லவேண்டாம், மாறாக வழிதவறி போன ஆடுகளாகிய இஸ்ரவேல் மக்களிடம் செலலுங்கள் என அழைப்பு கொடுக்கிறார். இன்றும் நம்மில் நம் அருகில் அயலகத்தாராகிய ஏராளமாகிய மக்கள் இருக்கிறார்கள். அவர்களிடத்தில் நற்செய்தி முதலாவதாக நாம் அறிவித்தல் வேண்டும்.

அப்பேஸ்தலா் 1:8 ல் முதலில் எருசலேம், யூதேயா, சமாரியா, அதன் பின்பு பூமியின் எல்லை எங்கும் என்னும் முன்னுரிமை வரிசை தரப்பட்டிருக்கிறது. இது இயேசுவின் அழைப்புக்கு இணைந்து போவதுபோல் உள்ளது என்பதை நாம் அறியலாம். ஆக யாருக்கும் நற்செய்தியை நாம் அறிவிக்க வேண்டும் என்ற தெளிவு நமக்கு தேவைப்படுகிறது. எங்கிருந்தும், எங்கேயும் நற்செய்தி அறிவிக்கின்ற பணியில் கடவுளின் இருத்தலை உணர்ந்திருக்கிற நாம் இந்த கடவுளின் இருத்தல் நிலையை உணராமல் வாழ்கின்ற எண்ணற்ற மக்கள் பக்கம் நம் கவனத்தையும் திருப்ப அழைக்கப்படுகிறோம்.

**நெல்சன் சோபித ராஜ்.**

# Youth Special...

## "God has always been the most important in my Life"




**32-year old prodigy Abraham Benjamin De Villiers holds incredible records: including the fastest-ever 50, 100 and 150 in One-Day International Cricket, among others. This testimonial piece delves into his grounded faith; we pray that you find this a blessing.**

***Michael Atherton, respected former English Captain Calls him "the best cricketer in the world". Ex-Aussie Cricketer Adam Gilchrist calls him "the most valuable cricketer on the planet". ABD, as De Villiers is fondly called, talks of his Walk with Christ.***

*"I am a Christian, a child of God. My story is the story of what God has planned and realized through me. I hope my story can be read and understood as tales of His achievements, certainly not my personal achievements, and I would really like people to appreciate that whatever glory there may be needs to be clearly recognized as His glory and not mine... My faith and my relationship with God are incredibly important to me and, after long consideration, and plenty of prayer… I am not afraid publicly to recognize God's role in my life.*

*"This doesn't mean I see myself as better than anyone else. I am not. This doesn't mean I see myself as morally superior to anyone else. I certainly am not. What it does mean, however, is that I try very hard to be receptive to the teachings of the Bible, that I am sincerely committed to the Word of God and that I aspire to lead my life in that way."*

***Could you tell us a bit of your testimony and how you came to know God?***

*I grew up in a religious family. God has always been the most important thing in my life. I experienced a few close moments with Him, one where I was lying in the back of our car heading back home from a day out with family friends, I was about 11-years-old and I just felt a very close connection with Him. Almost like He was trying to tell me to appreciate the things I have in my life, family,*

*friends, good health, a talent for sports and so forth. It felt so intense that it drove me to tears. I just knew it was Him urging me on to stay humble and to keep my eyes on Him for leadership. Then again in 2012, in Australia, we were out in the deep sea. After about 6-8 hours of getting seasick and just lying at the top deck of the boat, the same thing happened. I felt small and He connected with me again. Once again, urging me to appreciate the little things in life, my parents, close family and friends. Once again, telling me not to take my eyes off of Him. It was such a humbling feeling that once again it drove me to tears.*

***Do you see playing cricket as a form of worship to God?***
*Absolutely. He is always in my mind when I play. I don't see performance like that, but there is no doubt in my mind that He wants me to follow my passion, and in that way let His light be seen by whoever appreciates my skill on the field.*

***How do you personally cope with lean spells with the bat or gloves, is it all about mind-set?***
*It's obviously not nice to struggle, but then again it is part of Cricket, part of sport and part of life. You have ups and downs and I have always connected well with God in those times. Jesus went through a lot of hardship on earth and I see my hardship as an opportunity to relate and stay close to Him.*

***Having Christian team-mates around you while you are away for months touring must be really special?***
*It is great to have other Christian team-mates around you. We feed off of each other and connect whenever we can.*

***Do you have a favorite Bible Verse that encourages you?***
*Yes, I love 2 Corinthians 5:21, "Christ had no sin, but God made him become sin so that in Christ we could be right with God." As my life continues to unfold, I know how fortunate I am to experience moments of glory, moments like the one-day international against the West Indies at the Wanderers on Sunday, 18 January 2015 (when he hit the fastest 50 and 100), moments when everything goes my way, moments when I am being showered with praise and compliments. These are great moments, I am grateful, but I never need to be reminded that it's never my glory. It's all His glory. I think I understand.*

***COURTESY:*** *1. Interview with "Cross the Line,"*
*2. Excerpts from "AB The Autobiography", AB de Villiers*

# Things Are Not Always What They Seem

*- Diniya Sunshine*

*Two traveling angels stopped to spend the night in the home of a wealthy family. The family was rude and refused to let the angels stay in the mansion's guest room. Instead they were given a small space in the cold basement. As they made a bed on the hard floor, the older angel saw a hole in the wall and repaired it. When the younger angel asked why, the older angel replied, "Things are not always what they seem."*

*The next night the angels came to rest at the house of a very poor, but very hospitable farmer and his wife. After sharing what little food they had the couple let the angels sleep in their bed where they could have a good night's rest. When the sun came up the next morning the angels found the farmer and his wife in tears. Their only cow, whose milk had been their sole income, lay dead in the field. The younger angel was infuriated and asked the older angel, "How could you have let this happen? The first family had everything, yet you helped them. The second family had little but was willing to share everything, and you let the cow die. Why?"*

*"Things are not always what they seem." the older angel replied. "When we stayed in the basement of the mansion, I noticed there was gold stored in that hole in the wall. Since the family was so greedy and unwilling to share in their good fortune, I sealed the wall so they wouldn't find it. Then last night when we slept in the farmer's bed, the angel of death came for his wife. I gave him the cow instead."*

*Things are not always what they seem. If you have faith and a good heart, you just need to trust that every outcome is always to your advantage. You might not know it until sometime later.*

***"For by grace you have been saved through faith. And this is not your own doing; it is the gift of God, not a result of works, so that no one may boast."***

***Ephesians 2:8-9***

# TRANSFORMATION



*God is the Potter; you are His clay. He designed you before the foundation of the world. He arranges the events of each day to form you into this preconceived pattern. His everlasting Love is at work in every event of your life. On some days God's will and yours flow smoothly together. You tend to feel in control of your life when both the wills are in harmony. On other days you feel as if you are swimming upstream, against the current of His purposes. When that happens, stop and seek His Face. The opposition you feel may be from God, or it may be from the evil one.*

*Talk with God about what you are experiencing. Let His Spirit guide you through treacherous waters. As you move through the turbulent stream with God, let circumstances mold you into the one He desires you to be. Say yes to your Potter as you go through this day. Isaiah 64:8; Psalm 27:8*

***By Cecilia RajKumar***

---

# Ordinary to Extra-Ordinary

### Yield to Him. Experience the shift.

*Esther was a foreigner, but God made her a queen.*

*Daniel was a slave, but God made him a Prime Minister.*

*David was a forgotten shepherd, but God made him a king.*

*Moses was a failure without confidence, but God made him a leader.*

*Ruth was a widow, but God made her a mother.*


*Peter was a fisherman, but God made him a forceful preacher.*

*Paul was a murderer, but God made him a powerful apostle.*

*Remember, there is so much in you that God wants to tap and bring out.*

***Yield to Him completely.***
***He is waiting to convert you from the ordinary into extra-ordinary.***

## Cartoon of the Month




You, therefore, have no excuse, you who pass judgment on someone else, for at whatever point you judge another, you are condemning yourself, because you who pass judgment do the same things. – Romans 2:1 NIV

---

## Children who did the Projects for Feb'2019

***Shelbino Paul, Joshua, Jonathan, Ridhun, Roshan, Jayne***

## Children who wrote the Children's Quiz correct answers:

***Roshan, Shelbino, Eastrine, Earline, Jayne John, Joshua***

## Children who successfully did the Cross Word Puzzle

***Roshan, Diniya, Shelbino, Eastrine, Earline, Eric Jayden, Jayne, Dennis***

## Children who successfully did the Bible Word Search

***Shelbino Paul, Eric Jayden, Johan Sanjo, Jayne John, Joshua, Jonathan***



## *Children's Quiz (Primary and above)*

***FROM THE BOOK OF I PETER 1-5***

*1) Because of His_______ he gave us new life by raising Jesus Christ from death*
*a) Sacrifice b) Grace c) Mercy*

*2) Which is more precious than a gold that is tested in fire?*
*a) Faith b) Grace c) Love*

*3) Have your ___________ ready for action*
*a) Hearts b) Minds c) Hands*

*4) We are born again by ___________*
*a) Word of God b) Faith c) His resurrection*

*5) It is by His _________ that you have been __________*
*a) Grace, saved b) Mercy, renewed c) Wounds, healed*

***Complete the Verse:***

*6) "Abstain from ___________ which war against the soul"*

*7) "We must die to _______ and live for ______________"*

*8) "Be __________ and _________ because your enemy the devil roams around you like a roaring lion"*

*9) All of us must put on the apron of_________ to serve one another.*
*Love b) Humility c) Willingness*

***EXPLAIN your thoughts with reference***

*10) How should we pay back evil?*

*11) Who are the first ones to be judged by God during Judgement day?*

***<u>Last Month Children's Quiz Correct Answers: February– 2019</u>***

*From The Book of James 1-5*

*1) b) Patience (James 1:3) | 2) a) Wisdom (James 1: 5) | 3) c) Rich man (James 1: 10) | 4) c) listen, speak, angry (James 1: 19) | 5) a) Tongue (James 3: 8) | 6) enmity with God (James 4: 4) | 7) proud, grace (James 4: 6) | 8) b) Pray, praise (James 5: 13) | 9) c) Practice it (James 1: 22) 10) b) A man's anger (James 1: 20)*

***General Questions:***

*Below 10 Yrs. = Chapter 1:14 | Above 10 Yrs. = Chapter 2: 1-7*

# Kids Coloring (Kinder & Beginner)

Before Coloring....Explain the story to your kids...



*Dear Kids··· Write your name··· here...*

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |

**Children's who did the Coloring- January 2019**

Baby. Hartlyn

**Children's who did the Coloring- February 2019**


*Hartlyn* | *Rishon* | *Ridhun* | *Crasslin* | *Johan Sanjo* *Jehoash John* | *Jonathan * | *Jeremiah* | * Jemimah*

## *Bible Word Search (Beginner / Primary)*

**FIND THE BOOKS OF OLD TESTAMENT**

| | | |
|---|---|---|
| **1.** | S D E U G J | = |
| **2.** | O E A S H | = |
| **3.** | A D O B A H I | = |
| **4.** | S G N E S I E | = |
| **5.** | S V R O E R B P | = |
| **6.** | C E A Z H I H A R | = |
| **7.** | U C I T S E L I V | = |
| **8.** | E M A N T I N O S A L T | = |
| **9.** | E L K I Z E E | = |
| **10.** | H O S U A J | = |
| **11.** | I C L R N I O S H E C | = |
| **12.** | T U H R | = |
| **13.** | U M A H N | = |
| **14.** | A S I H A I | = |
| **15.** | A I M L A H C | = |






# *Bible Cross Word Primary & Above)*




***Series:II***




*1.Commander of Syrian army. I had leprosy*

*2. I married a Moabite woman*

*3.When I was a boy, God called me during my sleep four times to speak to me.*

*4.I was blessed by the Lord with great wisdom*

*5. My servant name is Gehazi*

*6. I rebuilt the wall of Jerusalem*

*7. I prophesized about coming of CHRIST in Old Testament*

*8) He adopted Esther as his daughter*

*9) Father of King David*

*10) Father of Samson*

*11) Eldest son of King Saul*

*12) Hebrew name of Esther*

*13) One among the sons of David*

*(The son who murdered his cousin brother)*

*Your Name Here….*

# வேத வினா விடை போட்டி

***எரேமியா 25 to 34***

1. *உரியாவை கொலை செய்யும்படி தீர்மானித்த ராஜா யார்? உரியாவுக்கு நடந்தது என்ன..?*
2. *பொய்யான தீர்க்கதரிசனம் சொல்லி அதை நம்ப வைத்த தீர்க்கதரிசி யார்? அவன் உரைத்த தீர்க்கதரிசனம் என்ன..?*
3. *சல்லூம் என்பவன் யார் ? அவன் குமாரன் யார்..?*
4. *நான் அவர்கள் தேவனாயிருப்பேன் அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று எத்தனை முறை வருகிறது? அதிகாரம் மற்றும் வசனம் குறிப்பிடவும்..?*
5. ***<u>தேடுக:</u>*** *எரேமியா 31: 15ம் வசனம் புதிய ஏற்பாட்டு நற்செய்தி புத்தகத்தில் எங்கு குறிப்பிடப்பட்டுள்ளது..?*
6. ***<u>யார்யாரிட -ம்</u> :*** *நீங்கள் வீடுகளைக் கட்டி, குடியிருந்து , தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனியைச் சாப்பிடுங்கள்.*

**முழு வேதாகமத்தில் தேடுங்கள்...**

7. ***<u>விடுகதை-1:</u>*** *மைந்தனின் நிலை அறிய மாறுவேடம் பூண்டு வந்தாள் வேடம் கலைந்து விட, விக்கி நின்றால், பொல்லாத செய்தி கேட்டு போனாள் வீட்டுக்கு அவள் யார் -?*
8. ***<u>விடுகதை-2:</u>*** *அவன் பிறப்போ தாய்க்கு துக்கம் அவன் நினைவோஆண்டவன் பக்கம், மனமுருக வேண்டினான் தேவாதிதேவனிடம் ,மாறாத தேவனின் ஆசிகளை பெற்றான்அவன் - யார்?*
9. ***<u>நான் யார்:</u>*** *நான் இஸ்ரவேலை முறியடித்து பேரீச்சை மரங்களின் பட்டணத்தை பிடித்தவன் 18 வருஷம் என்னை சேவித்தார்கள் ,இடது கை பழக்கமுள்ளவன் மூலம் வயிற்றுக்குள் கத்தி பாய்ச்சி கொல்லப்பட்டேன் நான் யார் -?*
10. ***<u>வேதாகம கணக்கு</u>*** *: எரிக்கப்பட்ட மந்திர தந்திரப் புத்தகங்களின் மதிப்பை, வனாந்திரத்தில் போஷிக்கப்பட்ட புருஷர்களின் எண்ணிக்கையால் வகுத்து (÷), 5 முதல் 20 வரையிலான ஆண்பிள்ளைகளின் மதிப்பிட்டால் பெருக்கி (X), மேல் வீட்டு அறையில் கூடியிருந்தவர்களின் எண்ணிக்கையால் கழித்தால் (--) கிடைக்கும் எண் யாருடைய தலையின் விலை...?*

## <u>கடந்த மாதத்திற்கான விடைகள்</u>

*1. எரெ 20:2, 3 | 2. எரெ 17:5 |3. எரெ 15:3 |4. எரெ 19:15 |5. எரெ 23:2 - 4*
*6. எரெ 23:30- 32 |7. எரெ 16:11,12 | 8. எரெ 24:4 – 7 | 9. எரெ 17:11 |10. எரெ 17:13*

## கடந்த மாதத்திற்கான விடைகள் எழுதியவர்கள்

**பெப்ரவரி-2019**

திருமதி . ஜோனீஷ் ஹெர்ஷெல்
திருமதி. எபென் A .பிரசாத்
திருமதி. பெட்ரீஷியா ஜேசன்
திருமதி. ரோஸ்லின் பாலாஜி
திருமதி. ஜெயின் ராஜவேல்
திருமதி. பிப்லின் நெல்சன்
திருமதி. நிர்மலா ஜெனிபர்
திருமதி. சிந்துஜா சதீஷ்
திருமதி. ராதிகா செல்வகுமார்
திருமதி. அகஸ்டா லாரன்ஸ்
திருமதி. ஹெப்சிபாய் நேசமணி
திருமதி. ஜெயந்தா ஜாண்

**இன்னும் வேதத்தை ஆழமாய் கற்க-தியானிக்க புரிந்துகொள்ள கர்த்தர் உங்களுக்கு அருள்புரிவாராக**


**வாழ்த்துக்கள்...!**

## ஏலம் / Auction (Weekly)

*சபை மக்கள் தங்கள் வீட்டில் உள்ள முதற்பலன்கள் மற்றும் தேவனுக்கு கொடுக்க விருப்பமுள்ள பொருள்களை சபைமுன் காணிக்கையாய் செலுத்தி தேவனை மகிமைப்படுத்தலாம். அந்த பொருள்; சபை ஆராதனை முடிந்த பிற்பாடு ஏலம் விடப்படும். சபை மக்கள் உற்சாகத்துடன் அந்த ஏலத்தில் பங்கு பெறுமாறு அழைக்கப்படுகிறீர்கள்.*

## Vacation Bible School 2019

Get ready... Gear up...




**29th March**
**To**
**5th April**



**4Pm to 8 PM**

# பிறந்த நாள் மற்றும் திருமண நாள் ஆசரிப்போர்

## பிறந்த நாள் ஆசரிப்போர் / *Birthday Celebrants*

| Date | Name | Contact |
|---|---|---|
| 01-Mar | Mr. David Livingston | 050 543 2630 |
| 02-Mar | Mr. Samuel Rathinam | 052 9625261 |
| 02-Mar | Mrs. Vasantha Davidraj | 050 125 1732 |
| 02-Mar | Mrs. Shaly Jesie | 056 394 1817 |
| 03-Mar | Mrs. Jesubhai Sornabalan | 055 640 0635 |
| 03-Mar | Mrs. M. Subha Alvin | 055 6757928 |
| 06-Mar | Mr. Hebin Jose George | 055 1314469 |
| 06-Mar | Mr. Derick Gasbath Joy | 050 667 7528 |
| 10-Mar | Mrs. Nithya .V.T | 055 6199268 |
| 11-Mar | Mr. D.P.Joseph Jovin | 0555 317 1742 |
| 14-Mar | Mrs. Radhika Grace SelvaKumar | 050 233 4421 |
| 15-Mar | Mrs. Eben A.Prasad | 050 783 4649 |
| 17-Mar | Mrs. R. Jackulin Milka | 055 3740685 |
| 17-Mar | Mr. P. N Jeya Chandran | |
| 19-Mar | Mr. A.S.Kannan | 050 482 1006 |
| 22-Mar | Mr. Pravin Babu | |
| 23-Mar | Ms. Gabrilin U.S.Shasmitha | 056 272 5446 |
| 23-Mar | Mrs. Aji Kumari | |
| 25-Mar | Mrs. Rebecca Prabu | 055 628 1237 |
| 27-Mar | Mstr. Johan Sanjo | 055 730 9275 |
| 28-Mar | Ms. Eastrine Benedicta Raj | 050 322 7592 |
| 28-Mar | Mstr. Ridhun Yojit | 055 8146 143 |
| 29-Mar | Mr. Antony | 055 701 1315 |
| 30-Mar | Mrs. Esther Kirubaharan | |
| 30-Mar | Mr. Derin David Livingston | 050 543 2630 |
| 30-Mar | Mr. Ajin Shah Silvester | 055 931 8750 |
| 31-Mar | Annlin Sophia Nelson | 055 602 8865 |

## திருமணநாள் ஆசரிப்போர் / *Wedding Anniversary*

| Date | Name | Contact |
|---|---|---|
| 07th Mar | Mr. Ujin Raj<br>Mrs. Sangeetha Ujin Raj | 056 272 5446 |

Wish you all…Many More happy returns of this day….



| | |
|---|---|
| குடும்ப எண்: *001* | ☏ *+971 56 710 5082* |
| குடும்ப தலைவர் பெயர் | *Rev.* கிறிஸ்டோபர் ராஜேந்திரன் |
| சொந்த ஊர் | கோயம்புத்தூர், தமிழ்நாடு |
| குடும்ப தலைவி பெயர் | திருமதி. ஏஞ்சல் கிறிஸ்டோபர் |
| மகன்<br>மருமகள் | திரு. டான் ரோட்ஜர்<br>திருமதி. ஹெப்சி ரோட்ஜர் |
| மகள்<br>மருமகன் | திருமதி . ஜேனட் குலசேகரன்<br>திரு. குலசேகரன் |

## கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே....

நமது திருச்சபை ஒவ்வொரு அங்கத்தினர்களையும் நாம் அறிந்து/தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஒரு உன்னத நோக்கத்துடன் இந்த “தெரிந்து கொள்வோம்”பகுதியில் ஒவ்வொரு குடும்பத்தினரின் விபரங்களும் (திருச்சபை குடும்ப எண் வரிசையில்); அவர்களது முழு விருப்பத்துடன் / அனுமதியுடன் மாதாந்திர மன்னாவில் வெளியிடப்படும்.

சபை அங்கத்தினர்கள் இதற்கு முழு ஒத்துழைப்பு கொடுக்க அன்பாய் கேட்டுக்கொள்கிறோம்.

# DAILY BIBLE READING February – 2019
## "Your word is a lamp to my feet and light for my path"

| Date | Morning / காலையில் | | ✓ | Evening / மாலையில் | | ✓ |
|---|---|---|---|---|---|---|
| 1 | லூக்கா 15 | Luke 15 | | யாத்திராகமம் 12 | Exodus 12 | |
| 2 | லூக்கா 16 | Luke 16 | | யாத்திராகமம் 13 | Exodus 13 | |
| 3 | லூக்கா 17 | Luke 17 | | யாத்திராகமம் 14 | Exodus 14 | |
| 4 | லூக்கா 18 | Luke 18 | | யாத்திராகமம் 15 | Exodus 15 | |
| 5 | லூக்கா 19 | Luke 19 | | யாத்திராகமம் 16 | Exodus 16 | |
| 6 | லூக்கா 20 | Luke 20 | | யாத்திராகமம் 17 | Exodus 17 | |
| 7 | லூக்கா 21 | Luke 21 | | யாத்திராகமம் 18 | Exodus 18 | |
| 8 | லூக்கா 22 | Luke 22 | | யாத்திராகமம் 19 | Exodus 19 | |
| 9 | லூக்கா 23 | Luke 23 | | யாத்திராகமம் 20 | Exodus 20 | |
| 10 | லூக்கா 24 | Luke 24 | | யாத்திராகமம் 21 | Exodus 21 | |
| 11 | யோவான் 1 | John 1 | | யாத்திராகமம் 22 | Exodus 22 | |
| 12 | யோவான் 2 | John 2 | | யாத்திராகமம் 23 | Exodus 23 | |
| 13 | யோவான் 3 | John 3 | | யாத்திராகமம் 24 | Exodus 24 | |
| 14 | யோவான் 4 | John 4 | | யாத்திராகமம் 25 | Exodus 25 | |
| 15 | யோவான் 5 | John 5 | | யாத்திராகமம் 26 | Exodus 26 | |
| 16 | யோவான் 6 | John 6 | | யாத்திராகமம் 27 | Exodus 27 | |
| 17 | யோவான் 7 | John 7 | | யாத்திராகமம் 28 | Exodus 28 | |
| 18 | யோவான் 8 | John 8 | | யாத்திராகமம் 29 | Exodus 29 | |
| 19 | யோவான் 9 | John 9 | | யாத்திராகமம் 30 | Exodus 30 | |
| 20 | யோவான் 10 | John 10 | | யாத்திராகமம் 31 | Exodus 31 | |
| 21 | யோவான் 11 | John 11 | | யாத்திராகமம் 32 | Exodus 32 | |
| 22 | யோவான் 12 | John 12 | | யாத்திராகமம் 33 | Exodus 33 | |
| 23 | யோவான் 13 | John 13 | | யாத்திராகமம் 34 | Exodus 34 | |
| 24 | யோவான் 14 | John 14 | | யாத்திராகமம் 35 | Exodus 35 | |
| 25 | யோவான் 15 | John 15 | | யாத்திராகமம் 36 | Exodus 36 | |
| 26 | யோவான் 16 | John 16 | | யாத்திராகமம் 37 | Exodus 37 | |
| 27 | யோவான் 17 | John 17 | | யாத்திராகமம் 38 | Exodus 38 | |
| 28 | யோவான் 18 | John 18 | | யாத்திராகமம் 39 | Exodus 39 | |
| 29 | யோவான் 19 | John 19 | | யாத்திராகமம் 40 | Exodus 40 | |
| 30 | யோவான் 20 | John 20 | | லேவியராகமம் 1 | Leviticus 1 | |
| 31 | யோவான் 21 | John 21 | | லேவியராகமம் 2-3 | Leviticus 2-3 | |

CSI Tamil Parish - Annual picnic - Feb. 16. 2019



Strictly For Private Circulation

Editor: Rev. Christopher Rajendran BSC., BD., MSC. (Psy)
Po. Box. 67747. Tel/Fax +971 3 755 9630
Mobile: 056 7105 082
E-Mail: csitcalain@gmail.com. Web: csitamilparish.org